**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**OS. 249 /2014**

**PW3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **திரு.** சின்னையன் | சாதி | |
| **த**/பெ | செப்பெருமாள் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுக்கா | | வயது | |
| மாவட்டம் | | தேதி | |

**(26.09.2019)** இன்று **1873**ம் ஆண்டு சட்டம் **10**ன்படி என்னால் உறுதியளித்து சாட்சியமளிக்கப்பட்டது**.**

**முதல் விசாரணை**

நான் தொடந்தனுரில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். வாதிகளை தெரியும். பிரதிவாதிகளையும் தெரியும். வா.த.சா.ஆ 55ல் நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன். செப்பெருமாள் என்று உள்ளது. ராமசந்திரனும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். ராமசந்திரன் தற்போது இறந்துவிட்டார். நான் கையெழுத்து போட்ட பத்திரித்தை யார் எழுதி கொடுத்தார்கள் என்று தெரியாது. அதில் தனபால் கையெழுத்து உள்ளது. பத்திர அலுவலகத்தில் நான் கையெழுத்து செய்யவில்லை. இன்னாரென்று நிரூபித்தவர் என்ற இடத்தில் என்னுடைய கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்து 10 வருடம் இருக்கும். தயாநிதி அப்பா பெயர் தனபால் என்று எனக்கு தெரியாது. பத்திரம் எழுதியவர் படித்து காண்பித்து கையெழுத்து கேட்டார் என்றால் ? கிடையாது. ராமசந்திரன் தான் கையெழுத்து போட சொன்னார். தனபால் என்பவருக்காக தான் சாட்சி கையெழுத்து போட்டீர்கள் என்று சொன்னால் ? தெரியாது.

கு.வி இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்பக்கொள்ளப்பட்டது,

முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம்,
விழுப்புரம்.26.09.2019